மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: July, 1910.	No-7.
புத்தகம் - ௧௨.	சென்னப்பட்டணம்: ஜுலைமீ 1910.	இலக்கம்-7.

ஆரண்யத்தில் ராணி.

ஒருகாலத்தில் இங்கிலாந்திற்கு ஆறுவது ஹென்றி என்றபேருடைய அரசரிருந்தார். இவர் காலத்தில் அதிகச்சண்டைகள் நடந்துவந்தன; இவ்வரசருக்கு மார்கரெட் என்ற மனைவியும் ஒரு சிறு புத்திரனுமிருந்தார்கள். ஒரு சமயத்தில் யுத்தம் நடந்தது. அப்பொழுது ஹென்றி அரசர் தம்மாலியன்ற மட்டும் ஜயம் பெறமுயன்றும் முடியாமற்போகவே தமது மனைவியையும், குழந்தையையும் இட்டுக்கொண்டு ஸ்காட்லாண்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

"கெட்ட்குடியே கெடும் பட்டகாலிலே படும்" என்பதற்கிணங்க ஹென்றிக்கு போகும் மார்க்கத்தில் பல இடுக்கண்கள் உண்டாயின. புசிக்க ஆகாரமோ கிடையாது. குழந்தைக்கு மாத்திரம் ரொட்டி கொஞ்சமிருந்தது. வழியில் ஒரு வில்லாளியைக்கண்டு "அப்பா, புசிக்க ஏதாவது உன்னிடத்திலிருந்தால் தயைசெய்து கொடு" என்று ராணியார் கேட்டார்கள். அவனிடத்தில் ஒரு காசுதானிருந்தது; அதை ராணியாருக்குக் கொடுத்தான். இதையும் வெகுமதியும் நற்சமயம்வரும்பொழுது திருப்பிக் கொடுப்பதாகச் சொன்னாள். ஒரு இரவில் அரசன் தம் மனைவியையும் குழந்தையையும் விட்டுப் பிரியும்படி நேர்ந்தது. ராணியார் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மிக்க விசனமுற்று தம்மனதை ஒருவாறாக தேற்றிக்கொண்டு கூடயிருந்த ஒரு வேலைக்காரனுடன் தம் குழந்தையை எடுத்துக்கொண்டு வழி கடந்தாள்.

ஒரு புதரிலிருந்து கும்பலாக திருடர்கள் வந்து ராணியாரைப்பிடித்து அவளிடத்திலிருந்த விலையுயர்ந்த ஆபரணங்களையும் உடுப்புக்களையும் அபகரித்துக்கொண்டார்கள். இத்துன்மார்க்கர்களில் ஒருவன் கத்தியை ஒருகையில் எடுத்துக்கொண்டு மற்றொருகையால் ராணியாரின் கூந்தலைப்பிடித்துக்கொண்டான். இவன் முதலில் ராணியைக் கொலைபுரிய வேண்டுமென்று எண்ணியே இவ்விதம் செய்தான். அகஸ்மாத்தாய் இவன் திரும்பிப்பார்த்தபொழுது தனது சிநேகிதர்கள் விலையுயர்ந்த ஆபரணங்களுக்கும், உடைகளுக்கும் சண்டை செய்வதைக்கண்டு மனவருத்தமுற்று ராணியாரை விட்டு விட்டு அவர்களிடத்திற்குப்போய் தனது பாகத்தைப்பெற அவர்க

ளுடன் இவன் போராடினான். ராணி தமது குழந்தையை எடுத்துக்கொண்டு கடவுள்தான் நம்மைக் காப்பாற்றினாரென்று எண்ணி அவரைத் துதிசெய்த பின் தமது வேலைக்காரன் குதிரையின் மீது ஏறி அதிவேகமாகச்சென்றாள். இத்திருடர்களை விட்டு வெகுதூரம் சென்று இனியாதொரு பயமிராதென்று நினைத்துக்கொண்டு நடுகாட்டில் கொஞ்சம் தங்கினாள்.

சில திருடர்கள் இங்கு வசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இராத்திரியில் சுயேச்சையாய் வெளிக்கிளம்பி கொள்ளையடிப்பது வழக்கம். ஏதோ மனுஷ சப்தம் இவர்கள் காதுக்கு கேட்கவே இவர்கள் ராணியிருக்குமிடத்திற்கு வந்து ராணியையும் அவளுடைய குமாரனையும் கொல்ல ஒருவன் துரிதமாக கத்தியை எடுத்தான். ராணி அத் திருடனுக்கு தான் இன்னாளென்றும் தமது குமாரன் அத்தேசத்துக்கு ஒரு சமயம் இராஜனாவானென்றும் சொல்லவே, அவன் இவ்விருவர்களின்மீது மனம்இரங்கி, இவர்களைக் கொல்லுவதற்குப் பதிலாக இவர்களுக்கு வேண்டிய உதவியைப் புரிந்தான். ராணிககுமுன் தண்டனிட்டு தன்னை மன்னிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அவன் இராணியாரின் குமாரனைப் பத்திரமான இடத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் காப்பாற்றி வருவதாக உறுதிமொழி கொடுத்தான். இத்திருடனுடைய கல்நெஞ்சு ஒரு நொடியில் கரைந்ததைப் பாருங்கள்? இது தான் தெய்வச்செயல் என்பது. அப்பொழுது ராணியாருக் குண்டான சந்தோஷத்திற்கு அளவுண்டா?

ராணியார் முதலில் இவ்விதம் செய்ய சம்மதிக்கவில்லை; ஏனெனில் "தமது அருமைவாய்ந்த புத்திரனை திருடன் கைவசமாக்குவது நியாயமல்லவே, ஒருவேளை அவன் குழந்தையைக் கொன்றுவிடின் நம்கதி என்ன? ஆனால் இத்திருடனே யோக்யதை யுள்ளவன்போல் தென்படுகிறான். இவனிடத்தில் இரக்கம், தயை முதலிய குணங்கள் குடிகொண் டிருக்கின்றன" வெனயோசித்து இவன்கையில் தமது பிரியமுள்ள செல்வக்குமாரனையளித்து நான் என் கணவரைத் தேடிவருகிறேன் என்று சொல்லியபின் தம் கணவரைத்தேடப் புறபபட்டாள். திருடன் தான் வாக்களித்த வண்ணம் அக் குழந்தையை வெகு ஜாக்கிரதையாக வளர்த்துவந்தான். குழந்தைக்குவேண்டிய நல்லவிலையுயர்ந்த உடுப்புகளைக் கொடுத்து இராஜனுடைய அந்தரங்க சிநேகிதர்களிடத்திற்கு இக்குழந்தையை இட்டுக் கொண்டுபோய் அவர்களுடன் இக்குழந்தை பழகி வரும்படி செய்வித்தான். அவர்களும் மிகப் பிரியத்துடன் இக் குழந்தையோடு கொஞ்சி விளையாடிக் கொண்டும் பேசிக்கொண்டும் வந்தார்கள.

ராணியார் காடெங்கும் அலைந்து திரிந்து கடைசியாக தமது கணவரைக் கண்டுபிடித்தாள். இருவரும் தங்கள் குழந்தையைப் பார்க்கச் சென்றார்கள. குழந்தையை அத்திருடன் மிக அன்புடன் இவர்களிடம் அழைத்துவந்தான். இவர்கள் அவனுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்துவிட்டு தமது குழந்தையுடன் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

பத்திராதிபர்.

ஏழை ஸ்திரீகளுக்கு கைத்தொழில்.

இந்தியாவில் வறுமை வரவர அதிகரித்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம்காலாகாலத்தில்மழையில்லாததே.நமது தேசத்தில் மத்தியவகுப்பைச்சேர்ந்தமாதர்கள்வீட்டுக் காரியங்களையெல்லாம்செவ்வனேசெய்துவருகிறார்கள். ஏழைகளாயுள்ளவர்கள் மிகக்கஷ்டப்படுகிறார்கள். ஏழைகளுக்குதொழில் அவசியம் வேண்டியது. மத்தியவகுப்பாரும் ஓழிவு நேரத்தில் சுலபமான தொழில்களைச்செய்யலாம். ஜப்பான் தேசத்தில் ஸ்திரீகள் சிறியநாடாத்தரியை வீட்டில் வைத்துக்கொண்டு தங்களுக்கு வேண்டியவஸ்திரங்களை செய்து வைத்துக்கொள்ளுகிறார்கள். சிலர் அதிக துணிகளை விற்பனைக்கும். நெய்கிறார்கள். இவ்விதமே ஐரோப்பிய மாதர்களும் செய்துவருகிறார்கள். நமது தேசத்தில் இவ்வழக்கம் இன்னும் கையாடப்படாமலிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. தனவந்தர்கள் தங்களுக்கு வேண்டிய உடுப்பு முதலியவைகளை தையற்காரனிடத்தில் கொடுத்து தைத்துக்கொள்ளுகிறார்கள். மத்தியவகுப்பாரும் இவ்விதமே ஏன் செய்துகொள்ளுகிறார்களோ தெரியவில்லை? ரவிக்கை, குழந்தைகளுக்கு வேண்டிய உடுப்பு முதலியவைகளை ஸ்திரீகளே தங்கள் ஒழிவு காலத்தில் செய்துவைத்துக்கொண்டால் குடும்பத்திற்கு லாபமல்லவா?

ஏழையாயிருப்பவர்கள் சிறிய இயந்திரங்களை சுவல்ப விலைக்குவாங்கி சட்டை, நிஜார், குல்லாய் முதலியவைகளைச்செய்து விற்று லாபமடையலாம். இப்பொழுது அகவிலையோ சொல்லிமுடியாது. அது குறைந்த பாடுமில்லை; இப்படியிருக்க, நம்மவர்கள் ஜீவனோபாயத்திற்குத் தக்க வழிகளைத் தேடிக்கொள்ளவேண்டியதவசியம். தங்கள் குடும்பத்தின் வரவு செலவைக் கவனித்து தக்கபடி செலவு செய்து மாதம் மாதம் கொஞ்சம் பணம் மீதி வைக்கவும் ஏற்பாடு செய்துவரவேண்டும். வரவுக்கு மிஞ்சி செலவு செய்யப்படாது.

பம்பாய் கல்கத்தா முதலிய விடங்களில் ஏழை ஸ்திரீகள் கைத்தொழில் செய்து ஜீவிக்கிறார்கள். நமது தேசத்திலும் அவ்விதம் அநேகர் செய்து வந்தபோதிலும் சிறிய இயந்திரங்களை வைத்துக்கொண்டு வேலை செய்து வர சௌகரியங்கள் ஏற்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் திரவியமில்லாத குறையென்போம். தனமுள்ளவர்கள் இயந்திரங்களை வாங்கி ஏழைகளுக்குக்கொடுத்து வேலைசெய்து ஜீவித்து வர உதவிபுரிந்தால் பேருபகாரமாயிருக்கும்.

கவர்ண்மெண்ட் பெண்கள் பாடசாலைகளில் தையல் வேலை பாய்பின்னல் முதலியவைகள் வெகு நன்றாக போதிக்கப்பட்டுவருகின்றன. இவைகளைச் செவ்வனே கற்றுக்கொள்ளும்படி பெண்களுக்கு புத்தி புகட்டிவரவேண்டும். நாமும் இவ்விஷயமாய் அடிக்கடி சில விஷயங்களை இன்னும் விரிவாக எழுத எண்ணியிருக்கிறோம். இவ்விஷயத்தில் தேர்ந்தவர்கள் எழுதியனுப்பினாலும் நலம்.

பத்திராதிபர்.

பருவங்கள்.

சாதாரணமாக நம்தேசத்தில் பிள்ளைகளுக்கு பருவங்களின் இயற்கையைப்பற்றி சொல்லிக்கொடுக்கவேண்டும். பருவங்கள் நம்மில் ஆறு உண்டு. அதாவது, இளவேனிற் பருவம், முதிர்வேனிற் பருவம், கார்ப்பருவம், கூதிர்ப்பருவம், முன்பனிப்பருவம், பின்பனிப்பருவம்.

சித்திரையும் வைகாசியும் இளவேனிற்பருவம், ஆனியும் ஆடியும் முதிர்வேனிற்பருவம், ஆவணியும் புரட்டாசியும் கார்ப்பருவம், ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்ப்பருவம், மார்கழியும், தையும், முன்பனிப்பர்வம், மாசியும், பைங்குனியும் பின்பனிப்பருவம். இங்கிலாந்து முதலிய தேசங்களில் 4-பர்வங்கள்தான் உண்டு. இப்பருவங்களின் இயற்கையைப்பற்றி அநேக பாடல்களிருக்கின்றன. இப்பொழுது முதிர்வேனிற்பருவமாகையால் இதைக் குறித்து சில பாடல்களைமாத்திரம் இத்தடவையில் பிரசுரிக்கிறோம்:—

முதிர்வேனிற்பருவம்.

(க்ரீஷ்மருது)

சீகாளத்தி புராணம்.

இன்னிள வேனில்செல்ல விருங்கடல் சுவறவிண்டோய்
சென்னியங் குன்றமெல்லாந் திசைமுக மழற்றச் செங்கேழ்ப்
பன்னிரு சுடருமொன்றாய்ப் பகற்கதிர் பரப்பியாங்கு
மன்னுயிர்த் தொகை வெதும்ப வந்தது முதியவேனில். (1)

உருகெழு காலச் செந்தீ யுருத்திரன் றலை யெடுத்து
வெருவர விழித்துநோக்க வெந்தழல் கொழுந்து விட்டுப்
பரவைமா நிலத்தில் வந்து பற்றிய தென்ன வெய்யோ
னெரிபடு கதிர்பரப்ப விருநிலங் கொதித்த தன்றே. (2)

வெந்தழ னிலத்து வெண்டேர் மென்புன லெனமயங்க
விந்திர சாலஞ்செய்த தெறிவளி மரமுந்திய
நந்தலில் பெருஞ்சிறப்பு நல்குகண் ணோட்ட மில்லாச்
சிந்தையர் கடுஞ்சொல் லென்னத் தீமுகந் திறைத்த தன்றே. (3)

நீடழல் வெஞ்சுரத்து நீரின்றி நாவுலர்ந்து
வாடுபு நிழல் பெறுது வருந்துபு திரியுமான்கள்
கோடிய கோலனுகிக் குடிகெட வலைக்குங் கல்லார்க்
கூடிய வறனில்வேந்தன் குடைபெறுக் குடிகளொத்த. (4)

நெடுநெறி மரங்களெல்லா நீணிதி யோடுசுற்றத்
தொடர்புடை யவர்போன் மக்கட் டொகுதியாற் சூழப்பட்ட
தொடுகழல் கிழிக்குங் கூர்ங்கற் சுடுபர லொடுவிராய
வடுதழற் சுரங்களெல்லா மாள்வழக் கற்றவன்றே. (5)

நிலக்காற்று கடற்காற்று உண்டாவது எப்படி!

காலைப்பொழுதிலும் பகற்காலத்திலும் நிலத்திலிருந்து சமுத்திரத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்கு நிலக்காற்று என்று பெயர். மாலைப்பொழுதில் சமுத்திரத்தி லிருந்து நிலத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்குக் கடற்காற்று என்று பெயர். இவ் விருவகைக் காற்றும் தினம் மாறி மாறிவருவது ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தம். கடற்காற்று தேகத்துக்கு மிகவும் ஆரோயத்தைத் தரத்தக்கது. பகற்காலத்திலே சூரிய உஷ்ண மிகுதியினால் வாடித் துன்பப்படும் உயிர்வர்க்கங்கள் மழையை எதிர்பார்த்து நிற்கும் பைங்கூழ் போல் கடற்காற்றை எதிர்பார்த்து நிற்கின்றன. நிலக்காற்று அவ்வளவாக தேகத்துக்கு ஆரோக்கிய மானதல்ல. மாறி மாறி வீசும் மேற்கண்ட இருவகைக் காற்றுகள் உண்டாவதற்குக் காரணங்களை அடியில் காட்டுகிறோம்.

பகற்காலத்திலே சூரியோதயகாலமுதல் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் யாவும் சூரிய உஷ்ணத்தினால் வெகு சீக்கிரம் அதிக வெப்பமாய் விடுகின்றன. அப்படி உஷ்ணக் கொதிப்பேறிய பொருள்களுக்குச் சமீபமாயுள்ள நிச்சலவாயுவும் வெகு சீக்கிரத்தில் வெப்பமாய் விடுகின்றது. அந்தப்படி அங்குள்ளவாயு வெப்பமானவுடனே அது நுண்ணியதாகி மேலெழும்பி வெளிப்பரப்பில் போய்விடுகின்றது. அதேகாலத்தில் சமுத்திரத்திலுள்ள தண்ணீரும் சூரிய உஷ்ணத்தினால் வெப்பமாகிக் கொண்டுவருகிறது. ஆனால் கல் மண் முதலிய கனத்த பொருள்கள் உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரத்தில் கிரகித்துக்கொண்டு வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரத்தில் சமுத்திரத்திலுள்ள தண்ணீர் உஷ்ணத்தைக் கிரகிக்கிறதுமில்லை. ஆகையால் வெப்பமாகிறதுமில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாக கொஞ்சம் மணலையாவது சில கற்களையாவது ஒரு புறத்திலும், தண்ணீரை ஒரு பாத்திரத்தில் வார்த்து மற்றொரு புறத்திலும் வெய்யிலில் ஒரு மணி நேரம் வரையில் வைத்துப் பார்ப்போமாயின், அந்த கற்களுக்கும் மணலுக்கும் உண்டாய்விடுகிற உஷ்ணக் கொதிப்பு எவ்வளவோ அதில் ஆயிரத்தி லொருபங்குகூட அந்த பாத்திரத்திலுள்ள தண்ணீருக்கு உண்டாகாமலிருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அந்த ஒருமணி நேரத்துக்குள்ளாகவே மேற்படி தண்ணீரின் உஷ்ணத்தையும் அது வார்க்கப்பட்டிருக்கிற பாத்திரத்தின் உஷ்ணத்தையும் தொட்டு ஒத்திட்டுப் பார்க்கையில், தண்ணீரைவிட கனத்த பொருளாகிய அந்த பாத்திரம் அதிக வெப்பமாயிருப்பதை நாம் பிரத்தியட்சமாய் அறியலாம். ஆகையால் சமுத்திரத்திலுள்ள ஜலத்தைவிட நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் சீக்கிரம் வெப்பமாய் விடுகின்றன. அப்படி வெப்பமாய்ப் போகும் நிலத்திலிருந்து மேலெழும்பிச் செல்லும் நிச்சலவாயு இருந்த இடத்தை நிரப்பும்படி சமுத்திர ஜலத்தின் மேற்புறமாயுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு நிலத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கின்றது. இந்தப்படி சமுத்திரத்திலுள்ள நிச்சலவாயு நிலத்தை நோக்கி மோதும் போதுதான் அதற்குக் கடற்காற்று என்று பெயர்.

உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரமாய் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பொருள்கள் கிரகித்து வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரமாய் அவை உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்ந்துபோய் விடுகின்றன. அந்தப்படி அவைகள் சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பே குளிர ஆரம்பிக்கின்றபடியால் வெகு சீக்கிரத்தில் அவைகள் குளிர்ந்து ஜில்லென்று போய்விடுகின்றன. சமுத்திரத்திலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தை எவ்வளவு மெதுவாய்க் கிரகிக்கின்றதோ அவ்வளவு மெதுவாகவே அந்த உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிருகிறது. ஆகையால் சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு மறுநாள் சூரியோதயம் வரையில் நிலத்திலுள்ள மண் கல் முதலிய திண்ணிய பொருளகள் யாவும் குளிர்ந்துபோ யிருக்குங்காலத்தில் சமுத்திரத்திலுள்ள ஜலம் உஷ்ணமாகவே இருக்கின்றது. இராவிலும் பிராதக் காலத்திலும் சமுத்திரத்திலாவது தடாகங்களிலாவது ஸ்நானஞ்செய்ய இறங்கும்போது தண்ணீர் உஷ்ணமா யிருப்பதை நாம் அனுபவ சித்தமாய்க் காண்கிறோம். உஷ்ணமாயிருக்கும் பகற்காலத்தில் சீதளமா யிருக்கும்படி யாகவும், சீதளமா யிருக்கும இராக் காலத்திலும் பிராதக் காலத்திலும் உஷ்ணமா யிருக்கும்படியாகவும் தண்ணீருக்கு லட்சணத்தை அமைத்துவைத்த ஜகதீசரது கருணையேகருணை!

> "வாவியுரைநீரும் வடநிழலும் பாவகமும்
> ....
> மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனி
> லின்பாருஞ் சீதளமாமே."

தடாகத்து நீரும் ஆலமர நிழலும் பாவுகல்போட்ட கருங்கற் கட்டடமும் சீதளகாலத்தில் வெப்பமாயும் உஷ்ணகாலததில் சீதளமாயு மிருக்கின்றன என்று தமிழ்ப் பண்டிதர்கள் இவ்வுண்மையை நெடுங்காலத்துக்கு முன்பாக அறிந்து கூறியுளார்.

☞ ஜனவிநோதினி.

1. ஆவது சர்க்கில் இன்ஸ்பெக்ட்டர் துரை அவர்கள் எலிமெண்டரி பாடசாலைகளுக்காகவும் அப்பாடசாலை உபாத்தியாயர்களின் உபயோகத்திற்காகவும் "பாடசாலைத்தோட்ட விஷயத்தைப்பற்றி" அனுப்பிய

சர்க்குலர்.

1. தோட்டத்தை ஏற்படுத்துவது:—பாத்திகள் செய்ய கெஜக்கோலையும் கயிறுகளையும் உபயோகப்படுத்தி சரியான சதுரமாய் செய்யவேண்டியது. இடத்தை வீணாக விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பாத்திகள் 6 அடி நீளமும் 3 அடி அகலமும் இருக்கவேண்டும். இன்னும் கொஞ்சம் அகலமாகவே இருந்தால் நல்லதுதான். 10 அடி நீளமும் 3 அல்லது 4 அடி அகலமும் இருக்கலாம். இதுவரைக்கும் மூங்கில் கெஜக் கோலையும் கயிற்றையும் உபயோகிக்கும் வழக்கம் கிடையாது. இனி அவைகள் உபயோகப்

படும்படி செய்யவேண்டும். இவைகளை உபயோகிக்கும் காரணங்களைப் பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

2. நிலத்தை சுத்தப்படுத்துவது:—பிரதி பாத்தியையும் கொஞ்சங்கூட விடாமல் 3 அடி ஆழத்திற்கு தோண்ட வேண்டும். அப்படி தோண்டுவதினால் வரும் மண்ணைத் தோட்டத்தின் ஓர் மூலையில் கொண்டுபோய் கற்கள் முதலியவைகள் இல்லாமல் தூற்றவேண்டியது. இப்படி தூற்றப்பட்ட மண்ணை நிர்மிதமான இருவமுள்ள குவியலாகச் சேர்க்கவேண்டியது. அதைச் சுற்றிலும் தற்கால வேலி போடவேண்டியது. ஆக்ஷேபணையில்லாத பட்சத்தில் கற்களை தோட்டத்தின் வெளிப்புறத்தில் கொட்டிவிட வேண்டியது. மண்ணை நன்றாகத் தூவிச் சுத்தப்படுத்திவிட்டால் பிரதி வருஷமும் சுத்தப்படுத்தும் வேலை இராது.

3. குவியலாக சேர்க்கப்பட்ட மண்ணை 15-நாள் வரையில் தோட்டத்தின் மூலையில் வைத்திருந்து இரண்டு மூன்று முறைமேல் கீழாய் கலக்கவேண்டியது. அப்படிசெய்யின் அதில் எழுச்சி காண்பிக்கும்.

4. எருப்போடுதல்:—நிலத்திற்கு எருப்போடுவதால் சாரம் அதிகரிக்கும். அழுகின இலைகள் ஆடுமாடுகளின் மலம் முதலானவைகளை உபயோகிக்கலாம். நிலத்தை ஸாரவந்தமாக்கும் மலங்களில் பன்றி மலமொன்று. பஞ்சமபாடசாலைகளிலும் ஆக்ஷேபணையிராத மற்றபாடசாலைகளிலும் இந்த மலத்தை உபயோகிக்கலாம்.

5. எருவைத் தயார் செய்தல்:—இலைகளை அழுகவைக்க ஒரு பள்ளமும் பசுமலமும் சேர்ப்பதற்கு ஒரு பள்ளமும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இரண்டிற்கும் ஒன்றுவது இருக்கவேண்டும். இலைகளையாவது அழுகின சாரபதார்த்தங்களையாவது எறிந்துவிடக்கூடாது. அல்லது எரியவிடவும் கூடாது. ஜாக்கிரதையாக அவைகளைச் சேர்க்கவேண்டியது. தோட்டங்களுக்கு எருப்போடுவதில் பசுமலம் போடுமவ்வளவு சாகபதார்த்தங்கள் போடக்கூடாது. ஆதலால்தான் பசுமலத்தை அதிகமாய் உபயோகிக்கவேண்டியது. அகப்படும் பக்ஷத்தில் மீன், பன்றி, குதிரை, ஆடு இவைகளின் சாணம், சாம்பல் முதலியவற்றை உபயோகிக்கலாம்.

6. நிலத்திற்குச் செய்யவேண்டிய கிரியைகள்:—சவுள் நிலத்திற்கும் களிமண் நிலத்திற்கும் மணலையும் சாம்பலையும் கலந்து போடவேண்டியது. இப்படிசெய்தால் லாபகரமாயிருக்கும். சுத்தமணல் பாங்காயிருக்கும் நிலத்துக்கு களிமண்போடவேண்டும். அப்படி செய்தால் ஜலத்தை நிறுத்திக்கொண்டு பலத்தை கொடுக்குமபடி செய்யும்.

7. மண்ணை மறுபடியும் பாத்தியில் சேர்த்தல்:—6. அங்குலம் ஆழம் மண்போட்டு சல்லடையின் கண்ணால் தண்ணீர் வார்த்து மண் நனையுமபடி செய்யவேண்டியது. மண் ஒரே கட்டியாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது. மறுபடியும் அவ்வாறங்குலம் ஆழம் மண்போட்டு இப்படியே செய்துகொண்டு வரவேண்டியது. பாத்திகளெல்லாம் நிறைந்த பின்பு சமப்படுத்தி பிள்ளைகள் அதை மிதியாமல் பார்த்துககொள்ளவேண்டியது. அதன் காரணததை பிளளைகளுக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

8. விதை விதைக்கத தகுதியான பாத்திகள்:—இப்படிப்பட்ட பாத்திகளுக்கு மேலான எருபோடுவ தவசியமல்லை. நன்றாய் சல்லிக்கப்பட்ட மண்ணும் கொஞ்சம் மணலும் சாதாரண சாணமும் போதும். சோளம் அவரை முதலியவற்றை நடவேண்டியதில்லை. இந்த விதைகளை விரலால் அல்

லது மரமுளையால் சமதூரத்தில் நட்டுவிடலாம். சிறிய விதைகளை விதைக்கும்போது நிலத்தை கொஞ்சம் நனைத்து இந்த ஈரத்தினால் முளை எடுத்துக் கொஞ்சம் பல முண்டாகும்படி செய்யவேண்டும். அதிகமாய் நனைத்துவிட்டால் விதைகள் முளை எடுத்து வளரா.

9. விதைகளை சேர்க்கும் விதம்:—விதைகளுக்காக இரண்டொரு முளைகளை தனித்து வைக்கவேண்டும். அவற்றிற்கு அவசிய மில்லாத கிளைகளையும் முளைகளையும் எடுத்துவிடவேண்டியது. செடிகள் வளர்ந்தபிற்பாடு அதில் இரண்டு பழங்கள் மாத்திரம் இருக்கும் படியாயும், செடியினுடைய பலமெல்லாம் அந்தப் பழங்களுக்கே உபயோகப் படும்படியாயும் செய்ய வேண்டியது. கத்திரி, வெள்ளரி, பூசனி முதலியவற்றிற்கு இவ்விதமேசெய்யலாம். காய் காய்த்து பழமாகும் விஷயத்திலும் சோளம் முதலியவற்றின் விஷயத்திலும் நன்றாய் முற்றின விதைகளை எடுத்துக்கொண்டு மற்றவைகளை தள்ளி விடவேண்டியது. இப்படி ஜாக்கிரதையாய் விதைகளை எடுத்துக் கொண்டு காற்று நுழையாமலிருக்கும் கண்ணாடி புட்டியிலாவது சிறு ரேக்குடப்பியிலாவது வைத்துப் பாதுகாக்கவேண்டியது.

10. கட்டு அல்லது ஒட்டுமரம்:—மா, ரோஜா, எலுமிச்சை முதலியவற்றின் மூலமாய் இவ்வேலையைக் கற்பிக்கவேண்டும்.

11. கிளைகளையும் தலைகளையும் நருக்குதல்:—அடர்த்தியாய் உள்ள கிளைகளை துண்டித்து அதன் உபயோகங்களை கற்பிக்கவேண்டியது. அவ்விதமே புகையிலை வெண்டை, சீமை கத்திரி முதலியவைகளையும் துண்டித்து அவற்றின் உபயோகங்களை கற்பிக்கவேண்டியது.

12. களைபறித்தல்:—தோட்ட பாத்திகளிலே யிருக்கும் புல் முதலியவற்றைப் பிடுங்கி எறிந்து விடவேண்டியது. அவற்றை எப்போதும் சுத்தமாக வைத்திருக்கவேண்டியது. புற்களைச் சாணமுதலிய வற்றைச்சேர்க்கும் பள்ளத்திலேயே போடவேண்டியது. களைபறிப்பதால் உண்டாகும் பயன்களை போதிக்கவேண்டியது. களைபறிக்கும்போது பிள்ளைகள் பாத்திகளை மிதித்து நிலம் கெட்டியாகும்படி விடக்கூடாது. பாத்திகளின் மத்தியிலிருக்கும் வழிகளில் இருந்துகொண்டு களை கட்டுபோன்ற ஆயுதத்தால் புற்களைப் பிடுங்கவேண்டியது.

13. பந்தலும் உபகரணங்களும்:—வெள்ளிரி, பூசினி, மொச்சை முதலிய செடிகளுக்கு தோட்டத்தில் பிரத்தியேகமாய் தோட்டத்தை சுற்றிலுமுள்ள நிலங்களில் கொஞ்சங் கொஞ்சமாவது வேறு படுத்தி வைக்கவேண்டியது. அவரை முதலிய கொடிகள் படரும் செடிகளுக்குப் பந்தல் போடவேண்டியது. கத்திரி சிமைக்கத்திரி முதலிய செடிகள் விழாமல் பாதுகாக்கவேண்டியது.

சீமை மண்வெட்டிகள் கட்டப்பாறைகள் பரம்புகள் முதலிய நூதனமான உபகரணங்களினுடையவும் நம் தேசத்திய கட்டப்பாறைகள் மண்வெட்டிகள் முதலியவைகளினுடைய உபயோகங்களைப் பற்றியும் பிள்ளைகளுக்கு கற்பிக்கவேண்டியது. நிலம் கெட்டியா யிருக்கும்போதும் லேசான உபகரணங்களை உபயோகிக்கக்கூடாது. மழை அதாரமாவது இருக்கவேண்டியது. இல்லாவிட்டால் கிணற்றிலிருந்தாவது, ஏறியிலிருந்தாவது ஜலத்தை கொண்டுவந்து நிலத்தை நனைக்கவேண்டியது.

வஸ்துக்களின் பொருள் நெருக்கம்.

ஒரு சிறு கூடை நிரம்ப உமி இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதை நீர் தூக்குவது சுலபமா, அல்லது, அதே கூடை நிரம்ப மணல் இருந்தால் அதைத்தூக்குவதுசுலபமா? உமிநிறைந்த கூடையைத் தூக்குவதுதான் சுலபம்; சரி. உமியும் கூடை நிரம்பத்தான் இருக்கின்றது; மணலும் அதே அளவுதான் இருக்கிறது; ஆனுல் உமிக்கூடை மட்டும்தூக்கச்சுலபமாய்இருப்பானேன்? மணலுக்கு பதிலாய் இரும்பு நிறைந்து இருந்தால் இன்னும் கனமாய் இருக்கும். மணல், உமி, இரும்புஇவற்றின்(Volume)பருமன் எல்லாம் ஒரு கூடையின் அளவே யானுலும், கனம் மட்டும் ஒவ்வொன்றுக்கும் வித்தியாசப்படுகின்றது!! இன்னுமொரு உதாரணம்; ஒரு ரூபாய் எடை குங்குமம் வாங்கினுல், ரூபாயின் பருமனேவிட குங்குமத்தின் அளவு எத்தனே அதிகம் பாருங்கள். ஒரு ரூபாய் எடை பஞ்சுஎடுத்துக்கொண்டால், பஞ்சின் பருமனும் ரூபாயின் பருமனும் எவ்வளவு வித்தியாசப் படுகின்றன என்பது தெளிவாய் விளங்கும்.

மேற் சொன்ன வாறு 1-கூடை நிறைய மண், கல், மணல், பஞ்சு, உமி இவற்றை எடுத்துக்கொள்வதற்கு பதிலாய், 1-அங்குலம் நீளம், 1-அங்குலம், அகலம், 1-அங்குலம் உயரம் (அதாவது 1-கன அங்குலம்) உள்ள மரம், இரும்பு, மெழுகு, வெள்ளி, தங்கம்—இவற்றை எடுத்துக்கொண்டு நிறுத்துப் பார்த்தால் ஒவ்வொன்றின் கனமும் வித்தியாசப்படும். தங்கத்தின்கனம் எல்லாவற்றையும் விட அதிகமாய் இருக்கும், அடுத்தபடி வெள்ளி, பிறகு இரும்பு, மரம், மெழுகு—எனமுறையே ஒவ்வொன்றுக்கும் கனம் குறைவு படும். ஒரே இடத்தில் ஒருவஸ்து மற்றென்றைக் காட்டிலும் கனம் அதிகமாய் இருந்தால், அதிக கனமுள்ள வஸ்துவின் பொருட்தொகுதி (மாஸ்) யும் அதிகமாய்த்தான் இருக்க வேண்டுமென்று போனபாடத்தில் நிரூபித்தோம் அல்லவா? மேற்கூறிய வஸ்துக்களெல்லாம் ஒவ்வொன்றும் ஒரு கன அங்குலம் அளவு தானே இருக்கின்றன; ஒரே பருமனுய் இருக்கும் போது ஒன்றைவிட மற்றென்றில் மாஸ் (பொருட்தொகுதி) மட்டும் அதிகமாய் எவ்வாறு இருத்தல் கூடும்?' என்பீர்களோ—அதற்கு ஓர் உதாரணம் கூறுகின்றேன்.

ஒரே அளவான மூன்று சிறு பெட்டிகளே எடுத்துக் கொள்வோம். மூன்றிலும், ஒரே விதமாய், நிரம்ப, பஞ்சு அடைத்திருப்பதாக வைத்துக் கொள்வோம். இப்பொழுது ஒவ்வொரு பெட்டியில் உள்ள பஞ்சும் கிட்டத்தட்ட ஒரே அளவாயும், ஒரே எடையுள்ள தாயும் தான் இருக்கும். அவ்வாறன்றிக் கொஞ்சம் எடையில் வித்தியாசம் இருப்பின் அவற்றின் தொகையைச் சரியாக்கிக் கொள்வோம். பிறகு ஒரு பெட்டியில் உள்ள பஞ்சை எடுத்து மற்றொரு பெட்டியில் நெருக்கமாய் அடைத்து வைக்கலாம். 'காலியான' பெட்டியை தூரவைத்து விடலாம். இப்பொழுதும் இரண்டு பெட்டியிலும் பஞ்சு நிறைந்துதானே இருக்கிறது. நிரம்பி யிருந்தாலும் தூக்கிப் பார்த்தால் இரண்டும் ஒரே கனமாய் இருக்குமா? இராது. ஏன்? இரண்டு பெட்டிகளில் இருந்த பஞ்சு இப்பொழுது ஒரு பெட்டியில் இருக்கிறது;

ஆகையால் ஒன்று மற்றொன்றைவிட இரண்டு பங்கு கனமாய் இருக்கும். இரண்டு பெட்டிகளும் ஒரேமாதிரியே இருக்கிறபடியால் ஒரு பெட்டியில் பஞ்சு நெருக்கமாய் அடைப்பட்டும், மற்றொன்றில் அவ்வளவு நெருக்கமாய் இல்லாமலும், இருப்பதால், நெருக்கமாய் அடைத்திருக்கும் பெட்டியில் மற்றொன்றில் இருப்பதைவிட இரண்டு பங்கு அதிகமான வஸ்துக்கள் இருக்கின்றன. ஒரு கூடை உமியில் பொருட்தொகை குறைவு; ஏனெனில் உமியில் பொருள் நெருக்கமாய் இல்லை. மணலில் பொருள் நெருக்கமாய் இருக்கிறது; ஆகையால் ஒரு கூடை மணலில், உமியில் இருப்பதைவிட பொருள் அதிகமாய் இருப்பதால், அதிகம் கனமாய் இருக்கிறது.

ஒரு கன அங்குலம் அளவுள்ள ஒரு மரத்துண்டில் உள்ள பொருளை விட ஒருகன அங்குலம் இரும்புத்துண்டில் பொருள் நெருக்கம் அதிகம்; ஆகையால் தான் இரும்பு அதே அளவுள்ள மரத்துண்டைவிட கனமாய் இருக்கின்றது. அவ்வளவேயுள்ள வெள்ளி இரும்பினும் கனமானது; தங்கம் அதினும் கனமானது. வஸ்துக்களில் உள்ள பொருள் நெருக்கத்தை ஆங்கிலேயர் Density—டென்ஸிடி—என்பர். ஆகையால் ஒரே பருமனுள்ள பல வஸ்துக்களை நாம் எடுத்துக் கொண்டு அவற்றை தராசு கொண்டு நிறுத்து அவற்றின் மாஸ் இவ்வளவென்று தெரிந்துகொண்டால், அவற்றில் உள்ள மாஸ்க்குத் தக்கபடி அவற்றின் பொருள் நெருக்கத்தையும் (Density) தீர்மானம் செய்துவிடலாம். ஒருகன அங்குலம், ஜலம், மரத்துண்டு, செங்கல், கண்ணாடி, இரும்பு, தாமிரம், ஈயம், வெள்ளி, தங்கம்—இவற்றை நிறுத்துப்பார்த்தால் ஜலத்தின் கனத்தைவிட மரத்துண்டு குறைவாயும், செங்கல் ஜலத்தின் கனத்தைவிட இரண்டுபங்கு அதிகமாயும், முறையே கண்ணாடி முதலியன, 3, 7, 9, $11\frac{1}{2}$, 13, 19 பங்கு அதிகமாயும் இருக்கும். ஆகையால் மரத்தில் பொருள் நெருக்கமாய் இல்லை என்பது புலப்படுகின்றது. செங்கலில் ஜலத்தில் இருப்பதைவிட இரண்டுபங்குஅதிகமாய் பொருள் நெருங்கி இருக்கின்றன; அதாவது செங்கலின் டென்ஸிடி ஜலத்தின் டென்ஸிடியை விட இரண்டுபங்கு அதிகம்; முறையே மற்றவற்றிலும்.

வஸ்துக்களின் பொருள் நெருக்கத்தைப் பற்றி நாம் தெளிவாய் அறிதல் வேண்டும். உமது மெஜையில் காகிதம் பறந்து போகாமல் இருக்கும்படி பாரமாகத் தூக்கிவைக்கும் கண்ணாடித் துண்டைப்பற்றிப் பேசுவோம். அதே அளவுள்ள — அதாவது அதே பருமனுள்ள — ஒரு மரத்துண்டு செய்து இரண்டையும் தூக்கிப்பார்த்தால் கண்ணாடித் துண்டின் கனம் மரத்தின் கனததைவிட 4, 5-பங்கு அதிகமாய் இருக்கும். இதற்கு மாறு கண்ணாடித் துண்டின் கனம் எவ்வளவோ—அதாவது அதன் மாஸ் எவவளவோ—அவ்வளவு கனமுள்ள ஒரு மரத்துண்டு வேண்டுமானல், மரத்துண்டின் பருமன் கண்ணாடியின் பருமனைவிட சுமார் 6-பங்கு அதிகமாய் இருக்கும்; அந்த மரத்துண்டை நாம் உபயோகித்தால் மேஜையின் கால் பாகத்தை அடைத்துக் கொண்டுவிடும் !!

“ஆம் ஐயா இவற்றையெல்லாம் அறிந்து கொள்வதில் பயனென்ன?” என்பீர்களோ! சொல்லுகிறேன். தாமிரத்தினல் செய்து தங்க ‘கிலிட்’ கொடுத்த கடிகாரச் சங்கிலி ஒன்று; முழுத் தங்கத்தால் செய்த சங்கிலி ஒன்று ஆகிய இரண்டும் ஒரே மாதிரி இருக்கின்றன; பளபளப்பு, பருமன்

முதலிய எல்லாம் சற்றும் வித்தியாசமில்லை. இரண்டும் தங்கமென்றே சந்தேகம் கொண்டான் ஒருவன்!! எப்படி அவ்விரண்டிற்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது? தராசுகொண்டு நிறுத்துப் பார்த்தால் தங்கச் சங்கிலி தாமிரச் சங்கிலியைவிட இரண்டு பங்குக்கு மேல் கனமாய் இருக்கும். அதுவேபோல் ஒரு ரூபாயும் அரையணுக் காசும் ஒரே அளவாய் இருப்பினும், அரையணுத் தாமிரக்காசு, ரூபாயைவிட எடை குறைவாய் இருக்கும். இவ்விதமாய் உலோகங்களின் சுத்தத்தைப் பரிசோதனை செய்ய அவற்றின் டென்ஸிடி நமக்கு நன்றாய்த் தெரிந்தால் மிக்க உபயோகமாய் இருக்கும்.

ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

பெற்றோரிடத்தில் அன்பு—பிராஸிகோவி யாவின்கதை.

ஆசியா, ஐரோப்பா, இக்கண்டங்களின் வடபாகத்தில் உருஷியா என்ற விசாலமான தேசம் இருக்கின்றது. அத்தேசத்தின் கிழக்கு பாகத்துக்கு சைபேரியா என்று பெயர். அத்தேசம் மிகக்குளிர்ந்த இடம். அனேக நாள் அத்தேசத்தில் பனிமூடியே இருக்கும். ஒருநாள் சாயங்காலமாயிற்று. எங்கே பார்த்தாலும் உறைபனி பெய்துகொண்டிருக்கிறது. அதினால் சுற்றுப்புறமெல்லாம் வெளேரென்று இருக்கின்றது. நடந்துபோவோருக்குக் கணுக்கால் வரையில், உறைபனியில் புதைகின்றது. எப்புறம் பார்ப்பினும் சற்று தூரத்துக்குமேல் தெரியவில்லை. மரங்களிலோ இலைகளே இல்லை. இலைகளுக்கு பதிலாய், சிறுசிறு பனிக்கட்டிகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன. "உஸ்ஸ்" என்ற சத்தத்துடன் குளிர்காற்று வீசுகின்றது. இச்சமயத்தில் கொடியவிலங்குகளும், வெளியே வரமுடியாதென்றால் மனிதர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமோ?

இத்தகைய உறைபனி வருஷிக்கும் சாயங்காலவேளையில், சைபேரியா என்னும் உருஷிய மாகாணத்தில் ஒரு சிறுபெண் அற்பமான உடைகளால் தன் தேகத்தை மூடிக்கொண்டு, தளர்ந்த நடையுடன் மேற் சொல்லியவழியில் நடந்துவருகிறாள். அவளுக்கு வயது பத்துப் பன்னிரண்டு இருக்கலாம். ஒருவரும் துணையில்லை. வலையிற்பட்ட மான்போல் மருண்டு சுற்றுமுற்றும் பார்க்கிறாள். உறைபனி இவ்விதமே இரவு முழுவதும் பெய்யுமானால், எங்கேபோய்த்தங்குவது, என்று பயப்படுகிறாள். அந்தப் பிரதேசமோ அவளுக்கு சற்றும் தெரியாதாகையால். "எவ்வூர் பக்கத்தில் இருக்கிறது; அங்குள்ள மனிதர்கள் எவ்விதமானவர்" என்ற விவரமே தெரியாது. ஆகையால் தெய்வமே துணையென்று நடந்துபோகப்போக குளிர்பொறுக்கமாட்டாமல் குழந்தை கீழே விழுந்துவிட்டாள். மறுபடி எழுந்து உட்கார்ந்து, சுற்றுமுற்றும் பார்க்கவே ஒருவரையும் காணோம். கால்கைகள் குளிரால் விரைத்துப்போய்விட்டன. ஒன்றும் தோன்றாமல் தன் சிறுமூட்டையைப்பக்கத்தில் வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள்!!

இருள் மூளுகின்றது; உறைபனி வருஷமோ அதிகமாகின்றது; இன்னும் இம்மாதிரி இரண்டு அல்லது மூன்றுமணிநேரம், உட்கார்ந்து இருப்பின், உறைபனியில் புதைந்து போகவேண்டியதுதான் என்று குழந்தைக்குத்தெளிவாய்த்தெரிந்தது. இதற்கு முன்னமேயே உறைபனியில் புதைபட்டு, இறந்தவர் பலரைப்பற்றி, ஏழைக்குழந்தை கேள்விப்பட்டிருக்கிறாள். தானும் அவ்விதமே புதைந்து இறந்துபோவதை நினைக்க, நினைக்கக்குழந்தைக்கு பயம் அதிகமாயிற்று. தன் காரியம் முடிவுபெறாமல் தான் இறப்பதா என்று மனமிரங்கி ஏங்கினாள்.

இதற்குள் நல்லவேளையாய் ஓர் சத்தம்கேட்டது. நாய்களால் இழுக்சப்பட்ட சக்கரமில்லாத "ஸ்லெட்ஜ்" வண்டியொன்று வந்தது. அதில் ஏறிப்போகுபவர்கள் இக்குழந்தை உட்கார்ந்திருப்பதைக்கண்டு, வண்டியை நிறுத்தி, "நீயார்" என்று விசாரிக்கவே, "ஐயா! நான் வெகு தூரத்திலிருந்து வருகிறேன், இககுளிர் பொறுக்கமுடியவில்லை; கால் விரைத்துப்போய் விட்டபடியால் கீழே விழுந்துவிட்டேன்" என்று சொல்லி அழுதாள். உடனே அவர்கள் அக்குழந்தையைத் தங்கள் வண்டியில் ஏற்றிக்கொண்டு, அவளை ஒரு இடததில் உட்காரவைத்து, அவள் தேக முழுவதையும் கம்பளிகளாலும் தோல்களாலும் மூடினார்கள். விடுபோய்ச் சேர்ந்ததும், நடுக்கூடத்தில் எரியும் நெருப்பைச்சுற்றிலும், உட்கார்ந்துகொண்டு, தேகம் சற்று உஷ்ணமடைந்த பின்பு, குழந்தைக்கு நன்றாய்ப்பேசச் சக்தி உண்டானவுடன், "ஏ! குழந்தாய்! இச்சிறுவயதில் நீ தூரதேசத்திலிருந்து தனியாய் இக்குளிர்காலத்தில் புறப்பட்டு வரக்காரணம் என்ன?" என்றுகேட்க, "ஐயன்மீர்! நான் சைபேரியாவிலுள்ள 'டோபால்ஸ்க்' என்னும் பட்டணத்துக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்திலிருந்து, வருகிறேன். அவ்விடத்தில் என் தகப்பனாரும், தாயாரும் இருக்கின்றனர். 'லோபுலாப்' என்னும் பெயரையுடைய என் தகப்பனார், ஒரு காலத்தில் உருஷியசேனையில் காப்டனாக இருந்தார். ஏதோ ஒரு காரணத்தால் என் தகப்பனாரைக் குற்றவாளி என்று சொல்லி, அவரைத் தேசத்தைவிட்டுத் தள்ளி, சைபேரியாவுக்குப் போய்விடும்படி தீர்மானம்செய்து விட்டார்களாம். என்ன காரணமோ அது சர்க்காருக்குத்தான் தெரியும். என் தகப்பனாருக்கும் தெரியவில்லை. அவரைச் சைபேரியாவுக்குத் தள்ளின காலத்தில் எனக்கு வயது இரண்டோ மூன்றோ இருக்கலாம். அனேக நாள்வரையில் எனக்கு புத்திதெரியவில்லை. வயது செல்லச்செல்ல என் பெற்றோர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றவிஷயம் எனக்குத்தெரிந்தது. இவர்கள் கஷ்டத்தை எப்படியாவது தீர்க்கவேண்டுமென்று, எனக்கு எண்ணமுண்டாயிற்று" என்றனள்.

"குழந்தைப்பெண்ணான நீ உன் பெற்றோர் கஷ்டத்தை எப்படித் தீர்ப்பாய் என் அருமைச்சிறுவளே" என்ன, "சொல்லுகிறேன்கேளுங்கள். என் பெற்றோர்க்கு நேர்ந்த கஷ்டத்தின் விபரம் தெரிந்தது முதல், கடவுளைத்தியானஞ்செய்யும் ஒவ்வொரு நாளும் என் பெற்றோர்கள் உருஷியாவுக்குத் திரும்பவேண்டு மென்றே வேண்டினேன். இப்படியே வேண்டிக்கொண்டிருக்கும் ஒரு சமயத்தில் 'நான் என் உருஷியாவுக்குக் கால் நடையாய் நடந்துபோய், சக்கிரவர்த்தியைக்கண்டு அவரிடம் சொல்லி, என் பெற்றோரை மறுபடியும், உருஷியாவுக்கு வரவிடும்படி கேட்டுகொள்ளக்கூடாது என்ற எண்ணம் என் மனதில் உதித்தது."

"அரசனை நீ எங்ஙனம் காண்பது! உனக்கு யார் உதவிசெய்வார்கள்" என்று அவர்கள் கேட்க, "சர்வவல்லவரான கடவுள் என்னை ரக்ஷித்துக் காப்பாற்றமாட்டாரா? அவரை நம்பித்தான் நான்போகிறேன். இக்காரியம் நன்கு முடியுமென்றே தான் எண்ணுகிறேன்" என்றனள். "அப்படியே தான் நன்கு முடியவேண்டும் என்று நாங்களும் கடவுளை வேண்டுகிறோம்" என்றனர். ஆனால் அவர்கள் மனதில் மட்டும் "இது எப்படி முடியப்போகிறது. ஐயோ! பாவம்! இக்குழந்தை உருஷியாவுக்குப்போவதற்குள் இறந்துபோய் விடுவாளே!!" என்று விசனப்பட்டனர்.

இப் பெண்மணியின் பெயர் பிராஸ்கோவியா. பிராஸ்கோவியா தன் பெற்றோருக்கு உதவி செய்யும்பொருட்டு பட்ட கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவு என்று நம்மால் சொல்லிமுடியாது. சதா அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றும், அதற்காகக் கடவுளை எப்போதும் தியானம் செய்துகொண்டிருந்தாள் என்றும், நான் முன்னமேயே சொன்னேனல்லவா? இவளுடைய தகப்பனார்மட்டும் குற்றவாளியே ஒழிய, பிராஸ்கோவியாவாவது, அல்லது அவள் தாயாராவது குற்றவாளி அல்ல, அவர் தேசாந்திரத்தில் போய்க் கஷ்டப்படுவதை சகிக்கமுடியாதவளாய், தன் புருஷன் தேசாந்திரம் போனபோதே கூடவே வந்துவிட்டாள் அவளுடைய தாய். எப்படி இருப்பினும் இச்சிறு குழந்தை தானாகவே வேறு துணையில்லாமல் உருஷியாவுக்குப் புறப்பட்டது எவ்வளவு துணிவான செயல் பாருங்கள்!!

முதலில் பிராஸ்கோவியா தன் எண்ணங்களைத் தன் பெற்றோருக்குச் சொல்லவில்லை. ஆனால் எவ்வளவு நாள்தான், தன் அருமைத் தாயிடத்தில் சொல்லாமல் இருப்பது. தன் தாயிடத்தும் தந்தையிடத்தும், தன் எண்ணத்தை வெளியிட்டதுமல்லாமல், அவ்விதம்செய்ய உத்தரவு கொடுக்கும்படி அவர்களைக் கெஞ்சிக் கேட்டாள். சில நாள்வரையில் அவர்கள் தம் செல்லக்குழந்தை சொன்ன வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளவே யில்லை. ஒவ்வொரு நாளும் தன்னுடைய வேண்டுகோளையே திருப்பித் திருப்பிச் சொல்லவே அவர்களுக்கு மனவருத்தம் முன்னிலும் அதிகமாயிற்று. உருஷியாவுக்கு சைபேரியாவி லிருந்துபோக வேண்டுமானால் எவ்வளவு கஷ்டம் இருக்கின்றதென்பது அவள் பெற்றோர்களுக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால் தம் அருமைக் குழந்தையையும், அனுப்பிவிட்டு மனந்தடுமாற அவர்கள் இஷ்டப்படவில்லை.

ஆனால் பிரஸ்கோவியா தான் எண்ணிய காரியத்தைவிட மனம் துணியவில்லை. பலவாறு கேட்டுக் கொண்டதின்பேரில் அவர் தகப்பனார் உன்னிஷ்டப்படி செய்யென்று உத்தரவு கொடுத்தார். தகப்பனார் உத்தரவு கொடுத்தால்மட்டும் போதுமோ? அவ்வூர் அதிகாரியிடம் ஒரு பிரயாணச்சீட்டு பெற்றுக் கொண்டவர்கள்தான் அவ்வூரைவிட்டுப் புறப்படலாம். பிரயாணச்சீட்டு இல்லாதவர்கள் வெளிப் புறப்பட்டால் அவர்களை மறுபடியும் திருப்பிப் புறப்பட்ட இடத்துக்கே அனுப்பி விடுவார்கள். அவள் தகப்பன் பிரஸ்கோவியாவுக்கு உத்தரவு கொடுத்தபோது "இவளுக்குப் பிரயாணச்சீட்டு கிடைப்பதே அருமையல்லவா? அது பெற்றால் அல்லவா புறப்படுவாள்? அது கிடைக்கவே போகிறதில்லை. நாம் தடைசெய்தோம் என்ற வருத்தம் என்னத்திற்கு குழந்தை மனத்தைப் புண்படுத்தவேண்டும்!! பிரயாணச்

சீட்டு கிடையாவிட்டால் தானே வீட்டில் நின்று விடுகிறாள்'' என்று மனதைத் தேற்றிக்கொண்டு, தான் பெண்ணுக்கு உத்தரவு கொடுத்தான்.

தகப்பன் எண்ணியபடி நடக்கவில்லை. ஏனெனில் முதலில் வெகு கஷ்டப்பட்டபோதிலும் சில நாளைக்குள், "பிராஸ் கோவியா என்னும் பெண் யாதொரு தடையும் இன்றி, உருஷியா போகலாம்,'' என்று, உத்தரவு வந்துவிட்டது. தகப்பனுக்கு உண்டான விசனத்துக்கு அளவில்லை. தான் முடியாது என்று எண்ணின காரியம் முடிந்துபோயிற்று. பெண்ணும் உருஷியாவுக்குப் போகவேண்டு மென்கிறாள்; தகப்பன் என்ன சொல்லியும், பிராஸ் கோவியா கேளாமல் ஒரே மனதாய் உருஷியாவுக்குப் போகத்தான் போவேன் என்று தீர்மானிக்கவே, தனக்கு மனம் இல்லாவிட்டாலும், உத்தரவுகொடுக்க வேண்டியதாயிற்று.

தாங்கள் பல வருஷங்களாய்ச் சேர்த்துவைத்து இருந்த அற்பப் பொருளுடன், தம்மனம் நிறைந்த ஆசிர்வாதத்தையும் கொடுத்து அனுப்பினார்கள். தாயும் தந்தையும், புறப்பட்டு சிலமைல்கள் போகும்வரையில், ஊரில் இருந்து பக்கத்து ஊருக்கு போகிறவர்கள் துணைவருவது சாதாரணம்தானே. அவர்களுடன் போகும்போதே, "என் தகப்பன் நீங்கா தரித்திரத்துடன், நித்தமும் உழைத்து, ஆடுமாடு குதிரைபோல் கஷ்டப்பட்டு வயிறு வளர்க்கின்றார். இங்குள்ள குளிரோ சொல்ல வேண்டியதில்லை. இத்துடன் தான் பிறந்த ஊரையும் தன் அருமைச் சிநேகிதர்களையும் விட்டுப் பிரிந்துபோன துக்கத்தால் அவருக்கு தினத்துக்குதினம், உடல்மெலிந்து வருகிறது. இவையெல்லாம் நீங்கி முன்போல் என் தகப்பன் உருஷியா வந்து சேரும்படி செய்வதற் கல்லவா நான் இப்பொழுது புறப்பட்டு இருக்கிறேன்!! "கடவுளே! நீர் எனக்கு உற்றதுணைவர்.'' எனக்கு இது கைகூடும்படி செய்யவேண்டு'' மென்று கடவுளைத் தியானித்துகொண்டே சென்றாள்.

முதலில் சில நாள் அவளுக்கு அவ்வளவு வருத்தமாய் இருக்கவில்லை. தன் ஊரைவிட்டு அதிகதூரம் போகவில்லை, ஆதலால் ஒரு ஊரில் உள்ளவர்களுடைய, உதவியால், மற்றொரு ஊருக்குப் போய்க்கொண்டு இருந்தாள். ஒவ்வொரு ஊரில் இருப்பவர்களும், பிராஸ்கோவியாவின் பரிதாபமான கதையைக்கேட்டும், அவளுடைய மனோதைரியம் வாய்ந்த செயல்களைப் பார்த்தும், மனவருத்தமும் ஆச்சரியமும் அடைந்தார்கள். சிலர் "இவ்வளவு பக்தியுடன் செய்யும் காரியம் கைகூடுமே ஒழிய வீணாகாது'' என்று தேற்றினர். சிலர், "உன்னிலும் சிறந்த குழந்தை பெற்றோர்களுக்குக் கிடைப்பது அரிது'' என்றனர். சிலர் மௌனமாய் இப் பெண்மணியின் காரியம் சித்தியாக வேண்டுமென்று அவளுடனே தாங்களும், கடவுளை வேண்டிக் கொண்டார்கள்!!

இவ்வாறு பலரும் தன்னைப் பார்த்துப் பரிதாபப் படுவதாலும் தைரியம் சொல்லுவதாலும் மனந்தேறித் திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் வழி நடந்தாள். இவ்வாறு எவ்வளவு நாள்தான் போகக்கூடும். அவள் போகவேண்டிய இடமாகிய செண்ட் பீடர்ஸ்பர்க் சுமார் 15 0 மைல் தூரமிருக்கிறது: அநேக இடங்களில் பசியாலும் கால்வலியாலும் களைத்துப் போய் விழுந்துவிடுவாள். அனேக இடங்களில் உடம்பு சௌகரிய மில்லா

மல் போகவே கஷ்டப்பட்டாள். இச் சமயங்களில் எல்லாம் பலரும் தன்னைத் தேற்றியதைப் பார்த்து அவர்களுக்கு பல நன்மைகளும் உண்டாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பாள். இம்மாதிரி நிகழ்ந்த ஒரு கஷ்டத்தைத்தான் முதலில் சொல்லி யிருக்கிறேன்.

தெய்வச் செயலாய் அவ் வுழைப்பாளிகள் பிரஸ்கோவியாவைக் காப்பாற்றி இராவிட்டால் குளிரில் தேகம் முழுவதும், விரைத்துப்போய் அன்றே இறந்துபோய் இருப்பாள். பனிகாலமும் நெருங்கிவிடவே, மறுபடி வசந்தகாலம் வரும்வரையில் அவர்களுடனேயே அவ்விடத்திலேயே இருந்துவிட்டாள். அவ்வூரில் இருந்த ஒரு பெரிய ஸ்ரீமாட்டி இவளுடைய உருக்கமான சரித்திரத்தைக் கேட்டதும், மனது இரங்கி இவளுக்கு வேண்டிய உதவி செய்ததுமன்றி சௌக்கியமாய் "நிஜ்னி நோவக்ரோட்" என்னு மிடத்துக்குப்போயச் சேரும்படி அனுப்பினாள். அவ்விடத்தில் மறுபடி பிராஸ்கோவியாவுக்கு தேகம் சௌக்கிய மில்லாமல் போயிற்று. அப்பொழுது அவ்வூர் கன்னியாமடத்தில் உள்ள பிக்ஷுக்களால் ஆதரிக்கப்பெற்று சௌக்கியமடைந்தாள்.

மறுபடி வழிநடக்கச் சக்தி வருவதற்குமுன் வசந்தகாலம்போய் வேனிற்காலம் வந்துவிட்டது. இப்பொழுது கொஞ்சம் சௌக்கியமும் ஏற்பட்டது. ஏனெனில் அக்கன்னி மடத்தலைவி பிராஸ்கோவியா வைத்தன் வண்டியில் அனுப்பியது மன்றி அரச குடும்பத்தாருக்குத் தெரிந்த ஒரு பெருமாட்டிக்குக் கடிதமும், கொடுத்து அனுப்பினாள். இக் கடிதத்துடன் மாஸ்கோவைப் போய்ச்சேர்ந்தாள். மாஸ்கோவில் இருந்த அம்மாது சிரோமணி பிரஸ்கோவியாவை உபசாரத்துடன் வரவழைத்து அவளுடைய கஷ்டத்துக்கு வருந்தி அவளைச் சிலநாள் தன்வீட்டில் வைத்து இருந்துவிட்டு, உருஷியாவில் பிரதான பட்டணமான ஸெண்ட் பீடர் ஸ்பர்க் என்னுமிடத்துக்கு அனுப்ப எண்ணினாள்.

அரச குலத்தினைச் சேர்ந்த இராஜபுத்திரி இவ்வுத்தமிக்கு நன்றாகத் தெரியும். அவளுடைய உதவியைக்கொண்டு, அரசனுடைய தாயாரை எளிதில் பிராஸ்கோவியா பார்க்கக் கூடுமென்று எண்ணினாள். ஆகையால் தனக்கு சிநேகிதமான அவ்விராஜகுமாரிக்கு ஒருகடிதம்கொடுத்து, மறுபடிமாஸ்கோவிலிருந்து பீடர்ஸ் பர்க்குக்கு அனுப்பினாள். புறப்பட்டு 18-மாதங்களுக்குப் பின்னர் பிராஸ்கோவியாதான்எண்ணிவந்த இடத்துக்குப்போய்ச்சேர்ந்தாள்.

இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களுடைய உதவி இருந்தபோதிலும் இராஜசேவை கிடைக்குமென்பது இலேசானகாரியமா? அதிலும் பிரஸ்கோவியாவோ பரம ஏழை! இவளுக்கு ராஜதரிசனம் என்றால் லகுவா? தான் சிபார்சு கடிதம் கொண்டுவந்து கொடுத்த இராஜவம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ மதியின் உதவியால் சக்கரவர்த்தியின் தாயைப்பார்த்து, அவளைச் சரணமென்று அடைந்தாள். அவளுடைய கருணையால் கடைசியில் சக்கிரவர்த்தியைக் கண்டு அவரிடம் தன் மனுவைக் கொடுத்தாள்.

இச்சிறுமி பெற்றோரிடம் உள்ள அன்பால் தன் உயிரையும் லக்ஷியம் பண்ணாமல் புருஷர்களுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் சாத்தியமில்லை

என்று தோன்றும் காரியத்தைச் செய்திருப்பதைப்பார்த்துச் சக்கிரவர்த்திக்கு மனம் இரங்காமல் இருத்தலும் கூடுமா? அவர்மனமும் கல்லோ? அலெக்ஸாண்டர்என்ற திருநாமம் பூண்ட பெருமானுன அச்சக்கிரவர்த்தி இக்குழந்தையின்செயலை வியந்து, இவள் கஷ்டத்துக்கு மனம் வருந்தி, "குழந்தாய்! உன் தகப்பனுருடைய கேஸை மறுபடி தீரவிசாரிக்கச் சொல்லுகிறோம், அதின் முடிவையும் சீக்கிரம் உனக்குத் தெரியப்படுத்துகிறோம்" என்றார்.

கடைசியாக சிலநாள் சென்றபின், பிராஸ்கோவியாவின் தந்தையை மன்னித்திருக்கிறதாகவும், அவர்கள் மறுபடி உருஷியாவுக்கு வரலாமென்று உத்தரவு ஆய் இருப்பதும், பிராஸ்கோவியாவுக்குச் சொன்னுர்கள். அதன்படி தன் தாயும் தந்தையும் உருஷியாவுக்கு வந்து சேர்ந்ததும், அவர்களைக் கண்டவுடன் நம் சிறுகுழந்தைக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவுண்டா? பெற்றோரும் குழந்தையைக்கண்டு கொண்டனர். ஆனந்த மிகுதியால் தேம்பித்தேம்பி அழுதனர். இன்னசெய்வது என்று தோன்ருமல், தங்களுக்கு உள்ள கஷ்டத்தை நிவர்த்திசெய்த தம்மகளை தெய்வமென்று எண்ணி, அவள் காலில் விழத்தொடங்கினர். ஆனால் புத்தி நுட்பமுள்ள பிராஸ்கோவியா அவர்களைத்தடுத்து, "உங்களைக் காப்பாற்றியவர் தேவாதி தேவனை கடவுள் அன்றோ! அவரல்லவா உங்களைக் கரையேற்றினர்!! அவரை நம்பியல்லவா நான் சக்கிரவர்த்தி யிடம்வந்தேன். அவரே எனக்கு உதவி செய்தவர்!! உங்களுக்கும் உதவிசெய்தவர்! ஆகையால் அவரையே வணங்குங்கள்" என்றனள்.

தாய் தந்தையருடன் சிலநாள் சௌக்கியமாய் வாழ்ந்து இருந்த பிறகு அவளுடைய தேகசௌக்கியம் மறுபடியும் ஒருதடவைகெட்டுப்போயிற்று. அதனுல் அவள் அனேக நாள் தன் பெற்றோருடன் வாழ்ந்திருக்கக் கொடுத்துவைக்கவில்லை. இளம் பிராயத்திலேயே அவளைக் கடவுள் தம்முலகத்துக்கு அழைத்துக் கொண்டுவிட்டார்.

ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

நரேந்திரபுர நங்கை.

(முன் தொடர்ச்சி.)

பிரபுவின் மாளிகைக்கு நேரே நாகன் வண்டியை நிறுத்த, இவ்விருவரும் வண்டியை விட்டிறங்கி உட்புகுந்தனர். வேலைக்காரியினுலிவர்கள் வரவை யறிந்த மாணிக்கம்மாள் வாசற்படியண்டை வந்து நின்ருள். இவள் தன் கணவனை தெய்வமெனக் கருதி அவர் வார்த்தையைத் தட்டாத பதிவிரதா சிரோன்மணி. சாந்தமே ஓர் உருவாய் ஜனித்தவள். நம் பார்வதியைப் பற்றிய சங்கதிகள் யாவற்றையுஞ் சவிஸ்தாரமாய் மாணிக்கம்மாளுக்கு அறிவித்தார். சங்கரனுக்குப் பார்வதி அங்குவந்தது தெரியாது; ஏனெனில், அன்றவன் இராஜாங்க விஷயமாய் அரண்மனையிற் றங்கிவிட்டான்.

சுமார் ஆறுமாதகாலமாய் நம் பார்வதியும் சங்கரனும் ஒருவரையொருவர் பார்க்கவேயில்லை.

மாணிக்கம்மாளோ தனக்கு ஒய்ந்த வேளைகளில் பார்வதிக்குக் கல்வி கற்பித்து வந்தாள். இவளுடைய நன்னடக்கையினால் தீனதயாள முதலியாரும் மாணிக்கம்மாளும் மகிழ்ச்சி யடைந்தனர்.

இப்படி யிருக்கையில், ஒருநாளிரவு சுமார் 10-மணியிருக்கும். சந்திரன் தன் குளிர்ந்த வெளிச்சத்தை நாலாபக்கங்களிலும் வீசிப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. மாறுவேடம் பூண்டு பட்டணத்தின் க்ஷேமலாபங்களை யறிய அரசன் சந்து சந்தாக நுழைந்து போகலாயினன். காற்றோ குளிர்ச்சியாக வீசுகிறது. சங்கரன் கம்பராமாயணம், அருணாசல புராணம், முதலிய தமிழ்ப் புத்தகங்களை, எடுத்துக்கொண்டு மேல்மாடியிற் சென்றான். அப்பொழுது பார்வதி, துற்குணமுள்ள வேடனுக்குத் தமையந்தியினால் விளையுந் தீமையை எடுத்துக் காட்டும்,

*"தீக்கட் புலிதொடரச் செல்லும் சிறுமான்போல
ஆக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீறுவிழித்தாள் சிலைவேட னவ்வளவில்
நீறாய்விழுந்தா னிலத்து" என்றபாட்டை நல்லஇராகத்துடன்பாடினாள்.

இதைக்கேட்ட சங்கரன்:—"குயிலும் வெட்கும்படியான குரலையுடைய யாரோ ஒரு சுந்தரவனிதை இப்பாட்டைப்பாடி இருக்கிறாள். அவள்யாவள்?" என்று நினைத்துச் சுற்றுமுற்றும் பார்க்கவே, அந்தப்புரத்தின் மேல்மாடியில் ஒரு விளக்கெதிரிலுட்கார்ந்து, கன்னிகையொருத்தி வாசிப்பதுகண்டு, சற்றுநேரந் திகைத்து, அவள் யாரென்றறிய ஆவலுள்ளவனாய் அந்தப்புரஞ் சென்று அவளைக்கண்ணுற்றதும்,

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின வாய்ச்சொற்கள்
என்ன பயனுமில" என்பதுபோல, சங்கரன் யாதொன்றும் பேசாமல் பதுமைபோலசைவற்று நின்றான். பார்வதி இவனைக் கண்டதும் திகிலடைந்தாளாயினும் பிறகு தன் மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு, "நானிவரைத்தவிர மற்றெவரையும் மணம் புரியேன்" என்று பிரதிக்ஞை செய்துகொண்டாள். இச்செய்தி எவருமறிந்திலர். பார்வதியும் அதே வருஷத்தில் திரண்டாள். அதற்கடுத்த வருஷம் பார்வதியின் மனோபீஷ்டம் நிறைவேறிற்று.

விவாகத்திற்கு வந்திருந்தசிலர் தம்பதிகளை ஆசீர்வதித்தனர், சில சாப்பாட்டுராமன்கள். "இன்றைக்கு நமக்கு வயிறுநிறைந்த சாப்பாடு" என்றனர்; சிலதுஷ்டர், "இப்படிப்பட்ட மனைவி நமக்குக் கிட்டுவாளா?" என்று

* இச்செய்யுளின்பொருள் :—அக்கினியை யொத்த கண்களையுடைய புலியானது தொடர்ந்து வருவதனால் ஓடுகிற இளமானைப்போல மெய்த்தளர்ந்துபோக அங்குமிங்குஞ் சுற்றிபோக வழியறியாமல் சீறிவிழுந்தாள். அதேநேரத்தில் வில்லையுடைய வேடன் பூமியிற சாம்பலாய் விழுந்தான்.

நினைத்து, "ஆஹா, அதற்கென்ன தடை ! நம் மழகினுக்கு இவளே பெண் சாதி யானலும் ஆவாள் "என்று தம்மனத்தைத் தேற்றிக்கொண்டனர். இவர்களில் இரங்காசாரி என்னும் ஒரு வைஷ்ணவபிராமணன் ; சில பெரிய மனிதர்:—"இவள் நற்குணமமைந்த பெண்" என்றனர். பொருமைக்காரர் சிலர் "இவனித் தேசத்தரசன் மந்திரியாயிருந்தபோதிலும் இவளை ஆளத் திறமை யுடையவனு? இதற்குள் இப்பெண்ணுக் கெத்தனை கள்ள புருஷரோ" என்று இழிவாய்ப்பேசினர்.

இப்படியாக, சிலர் நற்சொற்களையும் சிலர் தீஞ்சொற்களையும் சொல்லிக் கொண்டனர். இது உலக வாடிக்கை. ஆனல், இத்தம்பதிகளோ தம்முள் மாறுபாடின்றி அந்நியோந்யமாய் வசித்துவந்தனர்.

ஐந்தாவது அத்தியாயம்.

கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும்முன்னே.

"இவன் பிராம்மண வம்சத்தில் பிறந்திருந்தபோதிலும் எனக்குப் புருஷனுகத் தகுந்தவனல்ல. ஆனல், எதிர் வீட்டுச் சங்கரனே முதலியார் வம்சத்தில் பிறந்திருந்தாலும் எனக்கேற்றவனே. நான் அவனை மணம்புரியலாமென்று உத்தேசித்திருந்தேன். இதற்குள் அவனுக்குக் கலியாணமாய்விட்டதே. பார்வதி என்னைவிட அழகோ. அவள் சிவப்பு, நான் கறுப்பு. இவ்வளவுதான் வித்தியாசம். பார்வதி! நீயே அதிர்ஷ்டசாலி என்று ஜானகி நினைத்து நினைத்து மனமுருகிக்கொண்டிருந்தாள். இவள் அரங்காச்சாரியின் மனைவி.

இதற்குமுன்பே இரங்காச்சாரி, சங்கரன், பார்வதி இவ்விருவருடைய நட்பைக் கெடுத்து பார்வதியின் கற்பையழிக்க துர் எண்ணங்கொண்டான். இவன் இதற்காகவே ஒருநாள் சங்கரனிடஞ்சென்று:—"சங்கரமுதலியாரே! க்ஷேமந்தானு?" என்று வினவ, சங்கரன்:—"க்ஷேமந்தான்; நீங்களேது இவ்வளவு தூரம்?" என்றுரைத்தான்.

இரங்காசாரி:—"முதலியாரே! உமது உயர்ந்த ஸ்திதிக்கு ஒருகேடு சம்பவிக்கப்போகின்றது."

சங்கரன்:—என்ன ! என்ன !!

இரங்காசாரி:—"உம்முயர்ந்த ஸ்திதிக்கு ஒருகேடு சம்பவிக்கப்போகின்றது" என்ருன் மறுபடியும்.

சங்கரன்:—"ஏன்?"

இரங்காசாரி :—" உன்னிடத்தி லிருக்கின்ற நற்குணமென்னு மொரு வேரூன்றிய மரத்தைக் கெட்டநடத்தை யென்றும் ஒரு கோடரி கொண்டு பெண்ணொருத்தி வெட்டும்படியான ஸ்திதியிலிருக்கிருய். மேலும்,

"இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிட மாற்ற முறைக்கு மேலவ்வில்
புலிகிடந்த தூருய் விடும்."

என்கிறபடி, நற்குணமமைந்த பெண்சாதியை ஒருவனடைந்தால் அவ னுக்கிவ்வுலகில் ஒருகுறையுமில்லை. பெண்களால் தான் அவர்கள் புருஷருக் குக் கீர்த்தியும் அபகீர்த்தியும் உண்டாகிறது'' என்றான்.

சங்கரன்:—(பைத்தியக்காரத்தனமாய்) ''நீர்எனக்குவிளக்கமாய்ச்சொல் லும்'' என்றான்.

இரங்காச்சாரி:—''உன்பெண்சாதி கற்பில் தவறினாள். அவள் துர்நடத் தையை கவனிப்பதில்லை'' என்று அவருடைய உத்தமபத்தினியின்மீது பழி சுமத்தி எழுந்துபோய்விட்டான்.

சங்கரன்:—புத்திசாலியாகையால் பார்வதியைப் பலவிதத்திலுஞ் சோதி த்துப் பார்த்து, அவளப்படிப் பட்டவளல்லவென்று கண்டு அப்பிராமணன் சொன்னது பொய்யென்று நினைத்துக்கொண்டான்.

இரங்காச்சாரி:—''இவளை எப்படியாகிலும் கெடுத்துவிடவேண்டும். முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்'' என்று நினைத்துப் பகீரதப் பிரயத் தனஞ் செய்யத்தலைப்பட்டான். ஒருநாள் சங்கரன் அரண்மனையிலிருந்து வெளிப்போந்து தன்னில்லத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில், இவன் வரவுக்காக எதிர்பார்த்திருக்கும் குற்றமற்ற மனத்தை யுடைய பார் வதிக்கு நேரே, சங்கரன் பார்க்கும்படி, இரங்காச்சாரி ஒருகடிதத்தைச் சுரு ட்டிப் போட்டான். இதைச் சங்கரன் கவனித்து மேல்மாடியிற் சென்று அக்கடிதத்தை எடுத்து வாசிக்கலானான்.

''மங்கை கைகேசி சொற்கேட்டு மன்னர்புகழ் தசரதனும் மரணமானான்
செங்கமலச் சீதைசொல்லை ஸ்ரீராமன் கேட்டவுடன் சென்றான் மான்பின்
தங்கையவள் சொற்கேட்ட ராவணனும் கிளையோடு தானுமாண்டான்
நங்கையர்சொல் கேட்பதெல்லாம் கேடுவரும்பேருலகோர் நகைப்பாதாமே.''

என்ற முதியோர் வாக்கை மறந்து, உன்னையே நம்பி இருந்தேன். உன் மீது எனக்கிருந்த நம்பிக்கை என்னைவிட்டு நீங்கிற்று. எனக்கிருக்குங் கீர்த்தி யைக் கெடுத்தாயேபாவி! நான் உன்னை விவாகஞ் செய்துகொண்டதனா லெவ் வளவு கர்வமுற்றிருந்தேன்! என் வாழ்நாட்களெல்லாம் பயனற்றவைகளாய் விட்டனவே. என் வயிறு எரிகிறதே. அடீ பாவி! என் சொத்தைத் தின்று கொண்டே என்னை எப்படி ஏமாற்றினாபடி! இன்று நீ வீட்டிலிருப்பதைப் பார்ப்போம்'' என்றான்.

அவன் மீசை துடித்தது; கண்களில் தீப்பொறிகள் பறந்தன; நெற்றி நரம்புகள் புடைத்தன; அச்சமயத்தி லங்கு பார்வதி போயிருப்பாளானால் சங்கர னவளைக் கொன்றே இருப்பான்.

நண்பரே இனி நாம் கதாநாயகியின் கதி எவ்வாறாகிறது பார்ப்போம்.

சங்கரன் உடனே தன் முகத்தைக் கழுவிக்கொண்டு தீன தயாள முதலி யாரிடஞ் சென்று சங்கதிகள் யாவற்றையும் அவருக்கு விளக்கமாய்ச்சொன் னது மல்லாமல் அக்கடிதத்தையுங் காண்பித்தான். இதை மாணிக்கம்மாளுங் கேட்டுக்கொண் டிருந்தனள்.

தீனதயாள முதலியார் பார்வதியை விளித்து:—"நீ செய்தது வாஸ்தவந்தானா?" என்று அதிகக்கோபத்தோடு கேட்டார்.

"நாமென்ன தப்பிதஞ் செய்தோம், இவர் நம்மீது இவ்வளவு கோபமாயிருக்கிறாரே" என்று நினைத்துக்கொண்டிருந்த நிரபராதியான பார்வதியைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளி, "என்ன யோசிக்கிறாய்? மேலும், இனி உனக்கு இங்கு என்ன வேலையிருக்கிறது— நீ உன் கள்ளப் புருஷரைத் தேடிச் சென்றால் அவர்கள் உன்னைக் காப்பாற்றுவார்கள்" என்று கடிந்து நம் பார்வதியை வீட்டைவிட்டுத் துரத்தினார் இக் கற்றறி மூடரிருவரும். என்னசெய்வாள் பாவம்! விசனப்பட்டுக்கொண்டே இவள் நரேந்திர புரத்துக்குத் தென்பக்கஞ் சென்றாள். இவள் மரங்களடர்ந்த ஒருகாட்டை அடைந்ததும் அங்கிருந்த ஒரு கயிற்றைக் குனிந் தெடுத்துக்கொண்டாள். இதற்குமுன்னமே சங்கர னவளுக்குத் தெரியாமல் ஒரு மரத்திலேறி ஒளித்துக்கொண்டிருந்தான். நிலவின் வெளிச்சம் பட்டப்பகல்போல் வீசுகிறது.

"மான மழிந்தபின் வாழாமை முன்னினிது" என்பதை நம் பார்வதி நினைத்து, தானெடுத்த கயிற்றின் ஒரு முனையை மரமொன்றின் கிளையில் கடடிவிட்டு மறு முனையைக் கழுத்திலிறுக்கிக் கட்டிக்கொள்ளப் போகுஞ்சமயத்தில்," பொறு, பொறு "என்ற சப்தத்தைக்கேட்டு தன் புருஷன் தான் வருகிறாரென்று நினைத்து வாளா நின்று கொண்டிருந்தாள்: சங்கரனும் அவன்யாவ னென்றறிய அதிக ஆவலுள்ளவனா யிருந்தான்.

வந்தவன் ஜானகி புருஷனாகிய துன்மார்க்கன் தான். அவனவளிடத்திற்கு வந்து, "பெண்ணே! நான்தானுன்னை இப்படித் துரத்திவிடும்படி செய்தவன். நீ இனி சங்கரனிடம் போவதிற் பிரயோஜனமில்லை. மேலும், அவன் உன்னைச் சேர்க்கமாட்டான். ஆதலால், நீயும் நானும் எங்கேயாவது போய்விடலாம். இதற்கென்ன சொல்லுகிறாய்?"

பார்வதி அவனைக்கண்டது மதிகத் திகிலடைந்து:—அடாபாவி! துஷ்டா! உனக்கு இப்படிச் சொல்வதற்கு வெட்கமில்லையா? அன்னியன் பாரியை உனக்கு அன்னை என்று எண்ணவேண்டாமா? உன் மனதிற்கு எவ்வாறு துணிந்தது. உன்னை ஈசனெவ்வாறு தண்டிப்பாரோ! நானுன்னைவிடத் தாழ்ந்த குலத்தில் பிறந்திருக்கிறேனென்றுங் கவனியாமல் என்னை விரும்பினாயே சண்டாளா!

இரங்காச்சாரி : — நீ குலத்தில் தாழ்ந்திருந்தாலும் உன்னழகே என்னை மயக்கிற்று. மதுரமான மாங்கனியை விரும்பாதிருப்பவன் எவன்? நீ அழகாயில்லாவிடில் நான் ஏனுன்னை விரும்புகிறேன்?

பார்வதி:—அடாத வார்த்தைகளை என்னிடமுரைக்காதே. தமயந்தியைச் சேரவிரும்பின வேடன்கதி என்னவாயிற்று. துரௌபதியை விரும்பின சேகனெவ்வாறு மாண்டான். சீதையை இலங்கைக்குக் கெடுத்துபோன இராவணன் என்னகதி யானான். இவற்றை யோசித்துப் பேசு.

இரங்காசாரி:—"அவையெல்லாம் நான் நன்கு அறிவேன் நேற்றுப் பிறந்த நீயா எனக்கு புத்திசொல்ல வருகிறாய். என் இஷ்டத்திற்கு நீ இசையத்தான் வேண்டும்.

பார்வதி:—"நீ என்னைப் புருஷனைவிட்டு அன்னியன்மீது ஆசைப்படும் அற்பஸ்திரீ என்று நினைத்தாயோ? உன்னெண்ணம் எள்ளளவேனும் பயன்படாதென்பதை உறுதியாகக்கொள்" என்று கோபத்தோடு சொல்லினள்.

இரங்காச்சாரி:—"நீ என்ன சொன்னாலும் நான் கேட்கவேமாட்டேன். சீக்கிரம் வா. மனிதர்யாராவது வந்தாலுனக்குத்தானே அவமானம். வருகிறாயா மாட்டாயா? சொல் பெண்ணே! என்று சொல்லி அவளைக் கிட்டினான்.

பார்வதி:—"அடா மடையா! உனக்கு புத்தி இல்லையா? கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்பதுபோல உனக்குக் கேடுசம்பவிப்பதற்கு இது மூலகாரணமோ என்னவோ தெரியவில்லை. உடனே இவ்விடத்தைவிட்டு நீங்கினாலுனக்கு நன்மை" என்று சொல்லி, "ஆபத் பாந்தவா! நஞ்சுண்டகண்டனே! நான் தர்மபத்தினியாயிருந்தா லிவனுக்கேதாவதொரு துன்பம் சம்பவிக்கவேண்டும்" என்று நினைத்துக் கொண்டாள்.

அடே! துஷ்டா! நீ பிராமணனாயிருந்தும் அடாதவார்த்தைகளைப் பேசுகிறாய். உனக்குத்தெய்வம் இப்பொழுதே கூலிகொடுப்பார். மேலும் ஒரு களங்கமற்ற ஸ்திரீயின் மனதைப் புண்படுத்தபவன்கதி இன்னதாகுமென்பதைச் சிறிதேனும் யோசியாமல் நீ இப்படி என்னைச் செய்ததும் தவிர இப்பொழுது என்னை உன்னுடன்வர பலவந்தப் படுத்துகிறாய்; ஏ துஷ்டா! என்கண்முன் நில்லாதே. ஓடிப்போ. கடவுளைப் பலவாறு துதிசெய்து அழுதாள். ஓவென்று கூச்சலிட்டாள். ஐயோ ஈசா! இன்னும் இப்பாவியிங்கிருக்கிறானே! இவனைத் தண்டிக்கக் கூடாதாவென்று கதறினாள். ஓ சர்ப்பமே உடனேவந்து இக்கொடும்பாவியைத் தீண்டக் கூடாதா? வனாந்தர மிருகராஜாவே இப்பாதகனை விழுங்க சீக்கிரம்வாவென்று பலத்த குரலுடன் திக்கற்றவளுக்கு தெய்வமே துணையென்று எண்ணி கூவினாள்.

சங்கரன்:—"இனி நாம் பேசாதிருந்தால் எப்படியாவது பார்வதிக்குக் கெடுதிசம்பவிக்கும்" என்று நினைத்து மரத்திலிருந்து கீழேஇறங்கிவந்தான்.

பார்வதி இவனைக்கண்டதும், "பிராணநாதா" என்று மூர்ச்சித்து விழுந்தனள்.

இரங்காசாரி சங்கரனைக்கண்டதும் ஓடத்தலைப்பட்டான். சங்கரன் அவனைப்பிடித்துவந்து ஒரு மரத்தில்கட்டி தன் கைசலிக்க அடித்துப் பார்வதியை அவன் முகத்தில் துப்பச்செய்து," பார்வதி என்னை நீ மன்னிக்கவேண்டும்" என்றான்.

பார்வதி:—"நான் மன்னிக்கும்படியான தப்பிதம் நீர்செய்யவில்லையே"

சங்கரன்:—"நான் உன் குணத்தை மெச்சினேன். நாமிங்கு நடுநிசியிலிருப்பது உசிதமன்று; ஆதலால் நாமிப்பொழுதே நம் மில்லஞ் சேரவேண்டும். சீக்கிரம் நட" என்று சொல்லி அவளை அழைத்துக் கொண்டு வீட்டுக்கேகினான்.

துற்குணமுடைய இரங்காச்சாரியோ மரத்திற் கட்டப்பட்டவனாய் அவஸ்தைப்பட்டான். "இப்பாவி நம்முடைய குளிர்ந்த வெளிச்சத்தை அனுபவிப்பது தகாது "என்று, சந்திரன் மேகமாகியப் போர்வையினால் தன்னை மறைத்துக் கொண்டது. மழையும் பொழிந்தது. குளிரால் நடுங்கினனிப்பாவி.

ஓர் மாது.

படித்தபெண்ணே வேண்டும்.

(ராஜுவும் அவன் சிற்றப்பனும் உலாவப் போனபோது)
(ராஜு செய்துகொண்ட தீர்மானம்.)

சிற்றப்பன்:—ஏ! ராஜு! கலியாணம் எப்போது செய்து கொள்ளப் போகிறாய்?

ராஜு:—அதற்கு என்னப்பா இப்போ அவசரம்?

சிற்றப்பன்:—வயதாக வில்லையா என்ன?

ராஜு:—வயதானால் கல்யாணம்செய்து விடவேண்டுமாக்கும். இங்கே, என் வயிற்றுக்கே அப்பாடுபட்டு ஆகவேண்டியிருக்கிறது. நீங்கள் "என்ன"? என்றால் கல்யாணம் செய்துகொள் என்கிறீர்கள். என்பாடே அம்பலத்திலிருக்கிறது. நாளைக்கு அய்யாவுக்கு உத்தியோகம் போனாலும் போச்சு. உபகாரச் சம்பளம் ஆனாலும்ஆச்சு. அப்போஎன்படிப்பு கல்லடப்புத்தான். என்னமோ! படித்து பாஸ்செய்து பத்துரூபா சம்பாதித்தாலாவது பார்க்கலாம்.

சிற்றப்பன்:—அ! அந்த அதிகப்பிரசங்கம் எல்லாம் இருக்கட்டும். நேற்று, அந்தக் கனியூர், பெரிய வீட்டிலிருந்து காகிதம் வந்திருக்கிறது. பெண் நல்ல அழகாம், உன் அம்மாள் சொல்லுகிறாள். மூக்கும் விழியும் கிளி போல'—

ராஜு:—ஆ! என்ன அழகு வேண்டியிருக்கிறது?பட்டிக்காட்டுப் பெண். படிப்பா? பாட்டா? ஒன்றும் கிடையாது, அப்புறம் அழகு என்ன அழகு? குஞ்சியழகும் கொ..

சிற்றப்பன்:—(அதற்குள்) சரி! சரி அதெல்லாம் எனக்கும்தெரியும். கல்வி அழகுதான் அழகாம். என்னமோ!

ராஜு:—பின் என்னப்பா! படியாவிட்டால், என்ன! மரந்தானே. பின்னையும் நல்லமரம் என்று சொல்லவேணும். ஏன்! ஔவைதான் பாடியிருக்கிறாளே.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன் மரம்.

சிற்றப்பன்:—ஆகா! பெண்கள்தாம் படித்து உத்தியோகம் பண்ணப் போகிறார்களாக்கும்!

ராஜு:—உத்தியோகம் பண்ணினால்தான் படித்ததற்குபலனோ? நீங்கள் என்னவோ சொல்லு கிறீர்கள்.

சிற்றப்பன்:—பின்னை என்னப்பா? நீதான்கொஞ்சம்சொல் பார்க்கலாம்.

ராஜு:—சில சமயங்களில் என்ன மானக்கேடாய் முடிகிறது! தெரியுமா! மாதம் முப்பதுநாளும் தயிர் வாங்கி ஊற்றி உண்டு விடுகிறது. பின் பணம் கொடுக்கும்போது இவனுக்கும் அவளுக்கும் சண்டை. அவள் அப்போது தான் சமையல் முசுவாயிருப்பாள். அடெ! தயிர் இந்த இந்த நாள் இத்தனை இத்தனை வாங்கினோம் என்று ஒரு குறிப்புப் போட்டு வைக்கவேணுமோ? அல்லவோ? அதற்காவது தெரியவேணும்பாருங்கள். அதுவும் இல்லாதபடி மரத்தைக கட்டியழுவதில் என்ன பிரயோஜனம்? சொல்லுங்கள்.

சிற்றப்பன்:—ஆ, அப்படி யார் அப்பா! பார்க்கிறார்கள்? ஒத்திருந்தால் நல்லதுதான். ஆனால் அப்படி எங்கே......................................

ராஜு:—(அதற்குள்) சரி, இனி, உங்களுக்கு அவள் எப்படி? இவள எப்படி? என்பதாக ஒரு பட்டி ஒப்பிக்கவேண்டு மாக்கும், நாம் படிக்கும் போது சிநேகம் செய்வதற்கே என்ன என்னவோ சொல்லுகிறார்கள். இங்கிலீஷில் தான் சொல்லுவார்கள் பெண்டாட்டிக்கு "நற்பாதி" என்று ஏன்? தமிழில்தான் இல்லையா? இரண்டு பேரும் இரண்டு உடலும ஒரு உயிரும் ஆக இணங்கியிருக்க வேண்டுமாம். படித்ததும் படியாத மரமும் இணங்கி இருப்பதெப்படி?

சிற்றப்பன் : — சரி, சரி, இந்தக் காலத்தில் இதற்கெல்லாம் வேறு ஒருத்தர் குறுக்கிடப் படாதப்பா! நீ "இணக்கமறிந்து இணங்கு."

ராஜு:—ஏன்? இன்னும் சொல்லுங்கள். "சேரிட மறிந்துசேர்." "நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்."

சிற்றப்பன்:—சரி, சரி, இங்கு யார் உன்னை நீதி மஞ்சரிப்பாடங் கேட்டவர்? இதற்குத் தானுக்கும் உன்னை இவ்வளவு பாடுபட்டு படிக்கவைத்து, பாடவைத்து இத்தனை எல்லாம் பண்ணினது. ஏன்? ராஜு!

(ராஜு சற்று சும்மா இருக்க மறுபடியும்)

சிற்றப்பன்:—என்ன ராஜு' ஏன் பேசவில்லை?

ராஜு:—நான் பேசப்போனால்தான் நீங்கள் கண்டதை எல்லாம் சொல்லிக் கோபித்துக் கொள்ளுகிறீர்கள்.

சிற்றப்பன்:—எனக்கு என்னப்பா? கோபம் என்கோபம்உன்னைஎன்ன செய்யப்போகிறது? நீ வேண்டுமானால் "படித்த பெண்ணே வேணும்" என்று பிடிவாதமாய் இருக்கிறாய். படித்ததை யெல்லாம்என்னிடத்திலேயே காட்டுகிறாய். (அப்புறம் திரும்பிக்கொண்டு) இவன்தான் படித்தபடி இருக்கிறவனும்.

ராஜு:—ஆனால், சிற்றப்பா? நீங்கள்தான் சொல்லுங்கள். படித்தபடி நடக்கவேண்டாமா? "கல்வியைக் கல் கற்றபடிநில்."

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்று எவ்வளவோ சொல்லி யிருக்கிறார்கள்.

☞ வீ. சிதம்பரம்.

புத்தகவரவு.

தாவரநூல்:—இந்தப்புத்தகம் சென்னை மிஸ்டர் என். சுவாமிநாதய்யர், பி-ஏ. எல்-டி. அவர்களால் எளியநடையில் உபாத்தியாயர்கள் அறிந்துகொள்ளும்படி எழுதப்பட்டு சென்னை குமாரசாமி நாயுடு & சன்ச் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் சிறியதாயிருந்தாலும் இதில் அடங்கியவிஷயங்களோ மிகச்சிறந்தன. ஒவ்வொருவரியிலுமுள்ள விஷயத்தைக்

கொண்டு உபாத்தியாயர்கள் தங்கள் மாணுக்கர்களுக்கு ஒருநாளைப்பாடம் கற்பிக்கக் கூடுமென்று ராய்பஹதூர் ஜே. தர்மரங்கராஜு அவர்கள் முகவுரையில் எழுதியிருப்பது உண்மையே. இப்புஸ்தகம் மேலும் பெண்மணிகளுக்கும் மிக உபயோகமானது. ஏனெனில் அவர்களுக்கன்றோ பூந்தோட்டம் கறிகாய் தோட்டம் முதலியவைகளில் மிகப்பிரியம். அவர்கள் அவ்விதத் தோட்டங்களைச் சீராய் வைத்துக்கொள்வதற்கும், புஷ்பங்களைப் பூச்சிகள் கெடுக்காவண்ணம் பாதுகாக்கவும், இது பேருதவியாயிருக்கும். இப்புஸ்தகத்திலுள்ள விஷயங்கள் சிறந்தனவாகவும் அருமையானதாகவு மிருக்கின்றமையால் இது பொதுவாக யாவருக்கும் மிக உபயோகமுள்ள தென்போம். சித்திரப் படங்கள் வெகு நேர்த்தியா யிருக்கின்றன. இதன் விலை அணு-4. வேண்டுவோர் குமாரசுவாமி நாயுடு & ஸன்ஸ், 35, சின்னதம்பித் தெருவு, சென்னை என்று எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

பெண்கள் பக்கம்.

1. மயிலும், பசுக்களும்.

ஒருபிரபு வளர்த்துவந்த மயில் ஒன்று கர்வமுண்டாகி தன்னுடைய அழகை மற்றபட்சிகளுக்கும், மிருகங்களுக்கும் காட்ட மிகவும் விரும்பியது. அவ்வீட்டிலுள்ளவர்கள் கண்டு வியக்கும்படி மதிலில் ஏறி நிற்கவும் இறுமாப்புடன் ராஜநடை நடக்கவும் செய்துவந்தது. ஒருநாள் அந்த மயில் மைதானத்தில் புல் மேய்ந்துகொண்டு நிற்கும்மாடுகளுக்கு எதிரேபோய் அவைகள் மெச்சும்படி தன்னுடைய அழகு வாய்ந்த சிறகுகளை விரித்து "மாடுகள் புல்லின்மேற் கவனமா யிருந்ததேயொழிய மயிலை கவனிக்கவில்லை" மயில் மாடுகளுக்கு முன் குலுக்கிப்பிலுக்கி ஆடியும், மாடுகளுக்கு வெறுப்பே உண்டானதால், இது என்ன சங்கடமென்று அவைகள் மயிலின் அகங்காரத்தை அடக்க நினைத்துத் துரத்த தொடங்கின. மயில் அஞ்சி வேகமாய் ஓட்டம் பிடித்தது. ஓடியும் மாடுகளுக்கு அகப்படாமல் தப்பிக்கொள்ள அதனால் ஆகவில்லை. ஒரு பசு துள்ளிப் பாய்ந்து விரைந்து ஓடின மயிலினுடைய வாலில் மிதித்தது. அப்பொழுது இறகுகள் அநேகம் உதிர்ந்துபோயின. மயில் பங்கமடைந்து வந்தவழியே திரும்பி சென்றது.

2. தவளையும் குள்ளநரியும்.

ஒருகாட்டிற் தடாகமொன்றிருந்தது. அத்தடாகத்தில் வசிக்கும் ஒரு தவளை கரையில் தாவிக்குதித்து வந்திருக்குங்காலையில், அங்கேவந்த காட்டு மிருகங்களிடத்திலெல்லாம் 'யான் ஒருகைதேர்ந்தவைத்தியன், எவ்விதமாயுள்ளப்பிணிகளையுந் தீர்க்க வல்லேன், என்று யாரும் அறியக்கூடாத வார்த்தைகளால் தன்னைமெச்சி தனது வல்லமைதோன்ற உரத்த சத்தத்துடன் கரகரவென்று கூவி மற்றைய மிருகங்களை வியக்கும்படி செய்தது. முடிவில் ஒருகுள்ள நரிவந்து "வெளுத்த மெல்லிய தாடைகளுள்ளதும் புள்ளிகளால் நிறைந்து முள்ளது மிகவும் கறடும் அவலக்ஷணமுமான உடலையுடைய நீ எவ்வாறு பிறருடைய பிணிகளைத் தீர்க்க வல்லையோ? யான் அறிகிலேன், என்றது.